காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.KSM.மணிமுத்து MA.MBA.BL

பொருள்: மனைப்பிரிவு - சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியம் காஞ்சிரங்கால் குரூப், சர்வே எண்.200/1B2ல் மொத்தம் 0.83 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1. உறுப்பினர் செயலர், (பொ) சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்ட கூட்டுக்குழுமம், சிவகங்கை மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.L.P(SWP) DTCP/Sivagangai அவர்களின் LPA No.4/2024 Date.12.03.2024.

2. மனுதாரர் திருமதி.S.பிரசில்லா ஜானட் ஸ்மித் அவர்களின் விண்ணப்பம் நாள்.12.03.2024.

உத்தரவு:

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், காஞ்சிரங்கால் குரூப், காஞ்சிரங்கால் கிராமம், சர்வே எண்.200/1B2 மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு 0.83 ஏக்கர் 3350 ச.மீ சாலை பூங்கா, உள்ளாட்சி ஒதுக்கீடு, மின் பகிர்மான ஒதுக்கீடு இடம் நீங்களாக மனைப்பிரிவு அமைந்துள்ள மொத்த சதுர மீட்டர் பரப்பளவில் கோரப்பட்டுள்ள மனைகளின் எண்ணிக்கை 16 ஆகும். பார்வை 1-ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர் (பொ) சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக்குழுமம், சிவகங்கை மாவட்டம் அவர்களின் செயல்முறைகளின் படியும் மனைப்பிரிவிற்கு கோரப்பட்டுள்ள நிபந்தனைகளின் படியும் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளையும் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினையும், தானப்பத்திரம் எண்.549/2024, 550/2024ன் மூலம் காஞ்சிரங்கால் ஊராட்சிக்கு மனுதாரர் ஒப்படைத்துள்ளார்.

மேலும் பார்வை-1ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர் (பொ) சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக்குழுமம் சிவகங்கை மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு ஒப்புதல் ஆணையினை தொடர்ந்து மனுதாரர் மனைப்பிரிவில் கூராய்வு கட்டணம் ரூ.1000/-ம் நிலப்பயன் மாற்றுக்கட்டணமாக 3% நிலமதிப்பில் ரூ.7000/-ம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் கொடி நாள் நிதியாக நன்னிலை வரி கட்டணத்தில் 20% தொகையாக ரூ.2,000/- ARMED FORCE DAY FUND என்ற பெயரில் NET BANKING மூலம் செலுத்தப்பட்டு நகர் ஊரமைப்புத்துறை இயக்குனர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்து அதற்கான நகல் இணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே உறுப்பினர் செயலர் (பொ) சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் சிவகங்கை மாவட்டம், கடிதம் ந.க.எண்.SWP J4CH6K3L/2024/TCP (SWP) DTCP/SIVAGANGAI/LPA NO.4/2024ம் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு காஞ்சிரங்கால் குரூப், சர்வே எண்.200/1B2ற்கான மனையிடங்களுக்கு மனைப்பிரிவு அனுமதி வழங்க ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட மனையிடங்களை பத்திரப்பதிவு செய்வதற்கு ஊராட்சிக்கு எவ்விதமான ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடம்: காஞ்சிரங்கால்
நாள்: 13.03.2024

தலைவர் 13/3/2024
ஊராட்சி மன்றம்
காஞ்சிரங்கால்

நகல்:
1. சார்பதிவாளர்
சார்வதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை

2. உறுப்பினர் செயலர் (பொ)
சிவகங்கை கூட்டு உள்ளூர் திட்டக்குழுமம்,
சிவகங்கை மாவட்டம்.

3.திட்ட இயக்குனர்,
ஊரக வளர்ச்சி முகமை சிவகங்கை அவர்களுக்கு
பணிந்து அனுப்பப்படுகிறது.